**Starting time 12.26 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 198/2014**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 23.01.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> : இந்த வழக்கின் வாதி என் மீது அசல் வழக்கு எண் 272/2011 வழக்கை என்னை முதல் பிரதிவாதியாக காட்டி தாக்கல் செய்திருந்தார் என்றால், ஆமாம். அந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் ஆத்தூர் டவுன் ராசிபுரம் பிரிவு ரோடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் குடியிருந்து வந்தேன் என்றால், ஞாபகம் இல்லை. அந்த முகவரிக்குதான் எனக்கு அழைப்பாணை சார்வாகி நானும் வழக்கில் ஆஜராகினேன் என்றால், சரியல்ல.

2. வா.சா.ஆ.36-ல் நான் மேற்சொன்ன முகவரியில் தான் குடியிருந்து அழைப்பாணையை பெற்றுள்ளேன் என்றால், ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் நான் ஆறுமுகம் வழக்கறிஞரை வைத்து பதிலுரையை தாக்கல் செய்தேன் என்றால், ஆமாம். அந்த பதிலுரையில் K.R.தர்மலிங்கம் இவ்வழக்கின் வாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால், ஆமாம். தான செட்டில்மெண்டை பி.வா.சா.1 அவரது நிரூபண வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றால், இல்லை.

3. பி.வா.சா.1 வாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தது உண்மை என்பதால்

தான அதை பொறுத்து அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், அது பொய்யான ஆவணமாக இருந்திருந்தால் அவர் நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால், சரியல்ல. வாதி அசல் வழக்கு எண். 272/2011 வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் நான் அவர் மீது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.143/2011 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், இல்லை. வா.சா.ஆ.17-ல் அசல் வழக்கு எண். 143/2011 வழக்கின் வழக்குரை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை.

4. நான் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி எனது தகப்பனாரிடம் கேட்கவில்லை என்றால், சரியல்ல, 2014-ல் கேட்டேன். வா.சா.ஆ.17-ல் அசல் வழக்கு எண் 143/2011-ல் நான் காட்டுக்கோட்டையில் வசிப்பதாக கூறியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த வழக்கின் முதல் பிரதிவாதியாக எனது தகப்பனாரையும், 2 வது பிரதிவாதியாக எனது அண்ணனையும் காட்டியுள்ளேன் என்றால், ஆமாம். 3 முதல் 5 பிரதிவாதிகளாக எனது சகோதரிகளை காட்டியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த வழக்கில் 6-ல் 1 பாகத்தை எனக்கு பிரித்துக் கொடுக்குமாறு கேட்டேன் என்றால், ஆமாம், ஆனால் அது குறித்து எனது தகப்பனாருக்கு தகவல் சொல்லப்படவில்லை.

5. 09.08.2010, 30.08.2010 ஆகிய இரண்டு தேதிகளிலும், முதல் பிரதிவாதியான என் தகப்பனார் எனது அண்ணனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.17-ல் என் தகப்பனாரை எனது அண்ணன் அழைத்துச் சென்று மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டார் என்று நான் சொல்லவில்லை என்றால், அந்த சமயத்தில் எனக்கு தெரியாது. 2011-ல் நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே அந்த ஆவணங்களின் தேதி குறிப்பிட்டு சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

6. அந்த வழக்குரையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வேறு மூன்றாம் நபருக்கு வில்லங்கம் எறப்டுத்தினால் அது என்னை கட்டுப்படுத்தாது என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம். நான் தாக்கல் செய்த வழக்கில் நான் விசாரணைக்கே வரவில்லை என்றால், ஆமாம். அந்த வழக்கு 04.07.2014-ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், ஆமாம். அதற்கான உத்தரவு தான் வா.சா.ஆ.34 என்றால், ஆமாம். அசல் வழக்கு எண். 272/2011-ஐ வாதி ஆஜராகாததால்

தள்ளுபடி செய்யப்படவில்லை என்றாலும், அவர் வேறு வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வேண்டிதான் திரும்ப பெற்றுக் கொண்டார் என்றால், சரியல்ல.

7. வா.சா.ஆ.36-ல் அசல் வழக்கு எண். 272/2011 -ஐ மேற்கொண்டு நடத்தவில்லை என்று கூறி அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக இருக்கிறது என்றால், ஆமாம். வா.சா.ஆ.37ல் அசல் வழக்கு எண். 272/82011-ஐ தாக்கல் செய்த வழக்கறிஞர் புதிய வழக்கை அதே வழக்கு மூலத்தில் தாக்கல் செய்ய வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.36-ல் அசல் வழக்கு எண். 272/2011-ன் தீர்ப்புரையில் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்துதான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

8. அசல் வழக்கு எண். 143/2011-ல் என் சகோதரிகள் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என் தகப்பனார் தாக்கல் செய்த பதிலுரை குறித்து எனது வழக்கறிஞர் என்னிடம் கூறினாரா என்றால், கூறினார். அந்த பதிலுரையில் தன் முழு மன சம்மதத்துடன் தான் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக எனது தகப்பனார் கூறியுள்ளார் என்றால், ஆமாம். அசல் வழக்கு எண். 143/2011-லும் எனக்கு இந்த வழக்கில் ஆஜராகியுள்ள வழக்கறிஞர்தான் அந்த வழக்கிலும் வழக்கறிஞர் என்றால், ஆமாம். அசல் வழக்கு எண். 143/2011-ல் உள்ள வழக்கு சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால், ஆமாம்.

9. இந்த வழக்கிற்கான சங்கதிகளையும் நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால், ஆமாம். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூல சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால், ஆமாம். அசல் வழக்கு எண். 143/2011-ன் வழக்குரை சங்கதிகளுக்கும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை சங்கதிகளுக்கும் முரணான சங்கதிகளை எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால், தெரியாது. தாவா பற்றி முழுமையான சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்பதால் தான் நான் முன்னுக்கு பின் முரணான சங்கிதிகளை கூறுகிறேன் என்றால், சரியல்ல.

10. நான் என்னுடைய பதிலுரையில் நான் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக கூறியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் சொல்லலவில்லை

என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தில் அனுபவத்தில் நான் எப்போதும் இருந்ததில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. நான் என்னுடைய நிரூபண பிரமாண வாக்மூலத்தில் வாதி என் தகப்பனாரை அழைத்துச் சென்று மோசடியாக ஆவணத்தை ஏற்படுததிக் கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம்.

11. தற்போது என் தகப்பனார் என்னுடன் பேச்சு வார்த்தையில் தான் இருந்து வருகிறார் என்றால், என்னுடைய பராமரிப்ரில் தான் இருக்கிறார். வாதி ஏதோ ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட வேண்டி என் தகப்பனாரை அழைத்துச் சென்றது சம்மந்தமாக எதுவும் கூறவில்லை என்றால், சரியல்ல, 2014-ல் சொன்னார். 2010-ல் அழைத்துச் சென்றபோது எதுவும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. அப்போது தனியாக இருந்தார். 2010-லும் என் தகப்பனார் என்னுடன் பேச்சு வார்த்தையில் தான் இருந்தார் என்றால், இல்லை. என் தகப்பனார் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எப்போது ரத்து செய்தார் என்றால், 2014-ல் ரத்து செய்தார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 01.01 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**